குறைகளை எடுத்துச் சொல்லலாம். அப்படி எடுத்துச் சொல்கிறபொழுது தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்துவதற்கு சில திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக ஊராட்சி ஒன்றியங்களிடம் கொடுக்கப்படுகின்றன. அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் குறைகள் இருந்தால், அவ்வப்பொழுது தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

வேடம்பூரில் வெட்டாற்றின் குறுக்கே பாலம்

***352. வினா—திரு கொ. இர. ஞானசம்பந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா வலங்கிமான் கூட்டு மன்றத்தின் பார்வையிலுள்ள வேடம்பூரில் வெட்டாற்றின்மீது பஸ் போகும் பாலம் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) இந்த ஆண்டில் வேலை ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: விவரமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது, அதற்குத் தொழில் நுட்ப ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பின்னர் அவ்வேலை தொடங்கப்பெறும்.

அட்டுபாயில், போர்த்தி கிராமவாசிகளை வேறு இடத்துக்கு குடியேற்றல்.

***353. வினா—திரு. கே. போஜன்:** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குந்தா மின்சாரத் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட, அட்டுபாயில், போர்த்தி என்னும் கிராமங்களின் மக்களை வேற்றிடத்திற்கு மாற்றி, புனர் வாழ்வளிக்கும் (rehabilitation) திட்டத்தை உடனடியாக நிறைவேற்றும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: அட்டுபாயில் கிராமத்தில் வசிப்பவர்களை வேறிடங்களில் குடியமர்த்துவதைப் பொறுத்தவரையில், புதிய கிராமத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கு, வசதிகள் செய்து கொடுப்பதற்கான செலவைத் தமிழ் நாட்டு மின்சார வாரியமும் அரசாங்கமும் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கவேண்டும் என்று 1966 செப்டம்பரில் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. வருவாய்த்துறை வாரியம் மூலமாக 1968 பிப்ரவரியில் நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவசியமான செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்புகளை வருவாய்த்துறை வாரியம் பரிந்துரைத்துள்ளது. மின்சார வாரியத்தின் குறிப்புரைகள் வந்து சேர்ந்துள்ளன. செயற்குறிப்புகளை அரசு ஆலோசித்து வருகிறது.

போர்த்தி, போர்த்தி ஹடா சிற்றூர்களைப் பொறுத்தவரையில், கிராம மக்களை வேற்றிடங்களில் குடியமர்த்துவதற்கென நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ள விரிவான செயற்குறிப்புகளை மாநில மின்சார வாரியம் ஆலோசித்து வருகிறது.

திரு. ஜே. பெள்ளி கௌடர்: தலைவர் அவர்களே, இந்த கிராமங்களின் மக்கள் அரசுக்கு பல வேண்டுகோள் விடுத்து, 12 ஆண்டு காலம் உருண்டோடிவிட்ட காரணத்தினால், தயவு செய்து அரசு நடவடிக்கை மேற்கொள்ள முன்வருமா?